www.padippakam.com

# புதிய  பார்வை

பார்வை - 9 தை - 1992

## எட்மண்ட் சமரக்கொடி காலமானார்

முதுபெரும் இடதுசாரித் தலைவர்களில் ஒருவரும், லங்கா சமசமாஜக் கட்சியின் ஸ்தாபகரில் ஒருவருமான தோழர். எட்மண்ட் சமரக் கொடி, தனது 78 வது வயதில் காலமானார். இலங்கையின் முதலாவது பாராளுமன்ற தேர்தலில், டி. எஸ். சேனநாயக்கா (ஐ. தே. க) வை எதிர்த்து மீரிகம தொகுதியில் போட்டியிட்டார். இரண்டாவது உலகமகா யுத்தத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் சிறை வைக்கப்பட்ட இடதுசாரித் தலைவர்களில் தோழர். எட்மண்ட் சமரக்கொடியும் ஒருவர். 1960 களில் சுதந்திரக்கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகளுடன் சேர்ந்து சமசமாஜக் கட்சி கூட்டரசு அமைக்க முற்பட்டதை அடுத்து கட்சியைவிட்டு வெளியேறிய எட்மன், புரட்சிகர சமசமாஜக் கட்சியை அமைத்தார். தமிழ்பேசும் மக்களுக்கு சமஉரிமை வழங்கப்பட வேண்டும் என்று அன்று வாதாடிய முக்கிய இடதுசாரித்தலைவர் தோழர். எட்மண்ட் சமரக் கொடியாகும்.

# தொண்டமானின் யோசனைகள் இனப்பிரச்சனையை தீர்க்குமா?

அமைச்சர் தொண்டமான் அண்மையில் தெரிவித்துள்ள இனப்பிரச்சனை தீர்வுக்கான (தமிழ்கட்சிகளின் ஏட்டம்ச யோசனைகளை ஒத்த) யோசனைகள் இனப்பிரச்சனையை தீர்க்குமா என்பது, தென்னிலங்கையில் உயர்த்தப்பட்டுள்ள இனவாதக் குரல்களால் அரசியல் வட்டாரங்களில் சந்தேகமாகியுள்ளது.

இலங்கை அரசில் அமைச்சராக பதவி வகிக்கும் தொண்டமான், இனப்பிரச்சனை குறித்து முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து பிரேமதாசாவோ அன்றி ஆளுங்கட்சியோ கணக்கிலெடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

அதே வேளை இந்த யோசனைகள் தொடர்பாக தென்னிலங்கையில் இனவாதக் குரல்கள் உயரத் தொடங்கியுள்ளதானது, இனப்பிரச்சனையைத் தீர்க்க தொண்டமானின் யோசனைகள் உதவுமா எனச் சந்தேகத்தை கிளப்பிவிட்டுள்ளது.

தொண்டமானின் முயற்சிகள் இனத்துவேசத்தைக் கிளறும் என மாத்தளை பிக்குகள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த யோசனைகள் இறுதியில் வடக்கில் ஈழம் அமையவே வழி சமைக்கும். நாட்டை மேலும்சீரழிவுக்கே இட்டுச்செல்லுமென லோக்கமகாசங்கச் செயலாளர் போலரத்ன தேரோ கூறியுள்ளார்.

தொண்டமானின் யோசனைகளை நான் நிராகரிக்கிறேன் என பிரேமதாசா தெட்டத் தெளிவாக அறிக்கை வெளியிட வேண்டும் என மகாசங்கத் தேரோக்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர். ஒரு சிங்களப் பௌத்தன் என்ற முறையில் தொண்டமானின் யோசனைகளை நான் முற்றுமுழுதாக எதிர்க்கிறேன் என மல்வத்த பீடாதிபதி மகாநாயக்க தேரோ ஸ்ரீ விபஸ்சி தெரிவித்துள்ளார்.

இந்த யோசனைகள் அபாயகரமானவை, அழிவைத் தருபவை. நாட்டுப் பற்றுள்ள ஒவ்வொருவரும் இதை நிராகரிக்க வேண்டும் என களனி பல்கலைக்கழக உபவேந்தர் ராகுல தேரோ வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். தொண்டமானின் யோசனைகளை நாம் ஏற்றால் நாட்டில் அமைதிக்குப் பதில் அமைதியின்மையே ஏற்படும். ஆகவே நாம் கடுமையாக எதிர்க்க வேண்டும் என மகாபோதிச் சங்கத் தலைவரும் முன்னாள் (ஐ. தே. க) அமைச்சருமான காமினி ஜெயசூரியா அம்பலாங்கொடையில் நடந்த கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

நிலமை இவ்விதமிருக்க தொண்டமானின் யோசனைகளை தமிழ் கட்சிகள் பெரிதும்

(இரண்டாம் பக்கம் பார்க்க)

## புலிகள், அரசின் ஜனவிரோத நடவடிக்கைகளை எதிர்த்ததால் பழிவாங்கல்
## ஈ. பி. ஆர். எல். எவ். இனர் கடத்தல், கொலை

புலிகளும் அரசும் மேற்கொள்ளும் அராஜக, பாசிச நடவடிக்கைகளை பகிரங்கமாக எதிர்த்தும், இனப்பிரச்சனையில் இவர்கள் மேற்கொள்ளும் சித்துவிளையாட்டுக்களை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தியும், பொது எதிரியிடம் இன்றுவரை சரண் அடையாது இருந்துவரும் ஈ. பி. ஆர். எல். எவ். இனரை இருபகுதியினரும் பழிவாங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

அண்மையில் கிழக்கில் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவேண்டி தனது சொந்தப் பாதுகாப்பில் அக்கறைகொள்ளாது முன்னணித் தோழர்களுடன் இணைந்து பணிபுரிந்து வந்த ஈ. பி. ஆர். எல். எவ். தோழர். மனோகரிடம் மக்கள் செலுத்திய அன்பை சகித்துக் கொள்ளாத புலிகள் அவரைக் கடத்திப் படுகொலை செய்துள்ளனர். இவரின் உதவிகளைப்பெற்ற அகதிகளும் பொதுமக்களும் ஆங்காங்கே அஞ்சலிக்கூட்டங்கள் நடாத்தியுள்ளனர்.

கிழக்குமாகாண நிலவரங்களை அறியச்செல்லும் எதிர்க்கட்சிகள் குழுவில் ஈ. பி. ஆர். எல். எவ். சார்பில் பங்குகொண்டு வந்த அம்பாறை மாவட்ட பொத்துவிலைச் சேர்ந்த தோழர். சங்கர் கொழும்பில் வைத்து பொலிஸ் அடையாள அட்டை வைத்திருந்த ஒன்பது சிவிலுடை தரித்தோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இவரைத்தேடிய முயற்சிகள் பலனளிக்காது போகவே சர்வதேச மன்னிப்புச் சபை, செஞ்சிலுவைச்சங்கம் ஆகியவற்றின் உதவி நாடப்பட்டுள்ளது

## ஐ. தே. க. மாநாட்டில் தமிழ் கட்சிகள்

அண்மையில் ஆளும்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் வருடாந்த மாநாடு சுகததாசா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இம்மாநாட்டில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், முஸ்லீம் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ. பி. டி. பி) ஈரோஸ், புளொட், ரெலோ ஆகிய தமிழ், முஸ்லீம் கட்சிகள் கலந்து கொண்டு, தமிழ்பேசும் மக்களை அர்த்தமற்ற யுத்தத்தால் அழித்தொழித்து வரும், இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வை ஏற்படுத்த விரும்பாத ஐ. தே. கட்சிக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். இது ஐ. தே. கட்சியின் அரசின் நடவடிக்கைகளை தமிழ்பேசும் மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என எடுத்துக் காட்டும் நடவடிக்கையாகும். இவை அனைத்து தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வு காண அரசு தயாராய் இருக்கிறது என்ற மாயாஜாலத் தோற்றத்துக்கு துணை போகவே உதவுகிறது.

## யாழ்/பல்கலைக்கழக மருத்துவபீடம் மூடப்படும் அபாயம்
## புலிகளுக்கு எங்கும் எதிர்ப்பு வலுக்கிறது

இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டு, புலிகளின் கொடுமைகளைத் தாங்கிவரும் குடாநாட்டு மக்களுக்கு இன்னுமோர் பேரிடியாக, யாழ்/பல்கலைக்கழக மருத்துவ பீடம் மூடப்பட உள்ள அபாயச் செய்தி கிட்டியுள்ளது. புலிகளின் கட்டாய ஆட்சேர்ப்புக்கு அஞ்சி மாணவர்கள் இடம் பெயர்கின்றனர். புலிகளின் பயமுறுத்தல்களினால் விரிவுரையாளர்கள் படிப்பிக்க செல்ல அஞ்சுகின்றனர்.

இதேவேளை புலிகளுக்கு எதிரான எதிர்ப்பலைகள் குடாநாட்டில் அதிகரித்து வருகின்றன. மதில்களிலும் சுவர்களிலும் புலிகளுக்கு எதிரான எதிர்ப்புச் சுலோகங்கள் தோன்ற ஆரம்பித்துள்ளன. எங்களுக்குத் தேவை ஈழம் அல்ல உணவுதான்! நாம் விரும்புவது சமாதானம் யுத்தத்தை அல்ல!! போன்ற சுலோகங்கள் ஆங்காங்கு காணப்படுகின்றன. இதற்கு விரிவுரையாளர்கள், புத்திஜீவிகள், மாணவர்கள் ஆதரவு தெரிவிக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

## திருமலையில் மீளக்குடியமர்த்தப்பட்ட 600 குடும்பங்களின் பரிதாப நிலை
## ஈ. பி. ஆர். எல். எவ். இனர். நேரில் சந்திப்பு

அகதிமுகாம்களில் இருந்து வலுக்கட்டாயமாக மீளக் குடியமர்த்தல் என்ற பெயரில் பத்துமாதங்களுக்கு முன்னர் படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட 600 தமிழ் குடும்பங்கள் தற்போது உணவும், இருப்பிடமுமின்றி அகதிகளாக அல்லல் படுகின்றனர் என, எதிர்க்கட்சிகள் பிரதிநிதிகள் குழுவில் திருமலைக்குச் சென்ற ஈ. பி. ஆர். எல். எவ். பிரதிநிதி தெரிவித்துள்ளார். இந்த அகதிகளை நேரில் சந்தித்து அவர்களின் கஷ்டங்களைக் கேட்டறிந்த பிரதிநிதி, புதுக்குடியிருப்பு, மேற்குக்காலனி, பட்டிமேடு, நாயன்மார்திடல், குஞ்சப்பத்திடல் ஆகிய கிராமத்து மக்களே இங்கனம் மீளக் குடியமர்த்தவென கொண்டு செல்லப்பட்டவர்கள் எனத் தெரிவித்துள்ளார்.

**எமது மக்களுக்கு அமைதி, சமாதானம், சமத்துவம், ஜனநாயகம் கிடைக்கும்வரை நாம் இறுதிவரை உறுதியுடன் போராடுவோம்**

படிப்பகம்

www.padippakam.com



# எமது பார்வையில்

எதிர்காலம் குறித்த நம்பிக்கைசாயல் சிறிதமேயில்லாத நிலையில் இருக்கும் தமிழ்பேசும்மக்களது வாழ்வில் இன்னுமொரு புதுவருடம் பிறக்கிறது.

எம்மக்கள் மீதான ஆட்சியாளர்களின் அடக்குமுறையோ அன்றி அராஜகவாதிகளின் ஒடுக்குமுறைகளோ சிறிதளவேனும் குறையாமல் , மாறாக வெவ்வேறுவகையில் அதிகரித்துக்கொண்டுபோகும் நிலையில் இன்னுமொருவருடத்தை எம்துமக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அன்றாடவாழ்வே கேள்விக்குறியாகிப்போன ஒருதேசத்தில் வருடமுடிவு என்பது இழப்புக்களைக் கணிப்பிடுவதற்காகவே என்ற நிலை ஏற்பட்டுப்போன ஒருதேசத்தில் வாழும் (?) எம்மக்களின் மனநிலையினை இங்கே வெறும் வார்த்தைகளால் விளக்கிவிட முடியாது.

ஆனால் இன்றைய எம்மக்களின் அனைத்து துன்பங்களுக்கும் காரணமான ஸ்ரீ லங்கா அரசாங்கம், விடுதலைப்புலிகள் ஆகியஇருதரப்புமே எம்மக்களின் துன்பங்களை அலட்சியம்செய்து பிணங்களால் அமைக்கப்பட்டமேடைகளில் புதிய சமாதான நாடகங்களை புதிய வருட வெளியீடாக அறிவித்துள்ளனர்.

அரச ஊதுகுழல் பத்திரிகைகளும் புலிகளின் எடுபிடிகளும் இந்த 'தொண்டமானின் சமாதான விளையாட்டுகளுக்கு' முக்கிய இடம் கொடுத்து ஏதோ விடிவு வரப்போவதாக வித்தைகாட்டுகின்றன.

ஆனால் உண்மையிலே ஸ்ரீ லங்கா அரசோ அன்றி புலிகளோ சமாதானம் குறித்து எந்தவித அக்கறையும் கொள்ளவில்லை. எமது மக்களின் துன்பங்களை தீர்க்க எந்த முயற்சியும் செய்யவில்லை. இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும் எந்த ஆக்க பூர்வமான செயற்பாடுகளிலுமே இந்த இருதரப்புமே ஈடுபடவேயில்லை என்பதுதான் உண்மையாகும்.

யாழ்குடாநாட்டினுள் இருபத்தையாயிரத்துக்கும் மேற்பட்ட படையினரையும், ஈழதேசத்தின் இதர பாகங்களிலும் மேலும் பல்லாயிரம் துருப்புக்களையும் குவித்து வைத்துக்கொண்டு தினந்தோறும் எமது கிராமங்களை குண்டுவீசி நிர்மூலமாக்கி, குழந்தைகளையும், பெண்களையும்... முதியவர்களையும் கொன்று குவித்துக்கொண்டு இந்த அரசாங்கம் சமாதானத்தைப் பற்றிபேசுகிறது.
தமிழ்பேசும் மக்கள்மீது திட்டமிட்ட பொருளாதாரத்தடை, தீவின் எப் பகுதியிலும் தமிழ்பேசும் மக்கள்மீது மிகமோசமான அடக்குமுறை, தமிழ்பேசும் மக்களுக்கான குறைந்தபட்ச உரிமைகளைக் கூட வழங்க மறுக்கும் தன்மை, எம்மக்களைக் கொன்றழித்து எம்தேசத்தை நிர்மூலமாக்க பெரும் தொகையான ஆயுதக் கொள்வனவு... இத்தனையையும் செய்துகொண்டும் பிரேமதாசாவின் அரசு சமாதானத்தை பற்றி பேசுகிறது.

மறுபுறத்திலோ யாருமே மூச்சுக்கூட விடமுடியாத புலிகளின் காட்டுத் தர்பார் சொந்த மக்களையே தங்கள் இரும்புக்கால்களின் கீழ் போட்டுநசித்து, தனியொருவனின்பதவி, அதிகார, இரத்தவெறிக்கு தீனியாக ஆயிரக்கணக்கான அப்பாவிமழலைகளைப் பலிகொடுத்து எமது தேசத்தின் வளங்களை நாசம்செய்து ஜனநாயகத்தின் சுவடுகளையே அழித்தொழித்து வன்முறை மீது மட்டுமே காதல் கொண்ட மனநோயாளர்களான புலிகளும் இப்போது சமாதானத்தைப் பற்றி பேசுகிறார்கள்.

உண்மையிலேயே இந்த இருதரப்புமே சமாதானம் குறித்து அக்கறை கொண்டவர்களாயின் உடனடியாக யுத்தநிறுத்தத்தை செய்யுங்கள். சட்டம், ஒழுங்கு, நிர்வாகம் ஆகியன நடக்கக்கூடிய நிலையினை ஏற்படுத்துங்கள். தமிழ்பேசும் மக்கள் மீதான பொருளாதாரத்தடையை உடனடியாக விலக்குங்கள். இருதரப்பினராலும் கைது செய்யப்பட்டு எந்தவித விசாரணையுமின்றி கொடிய சித்திரவதைகளை அனுபவித்து வருபவர்களை விடுதலை செய்யுங்கள்.

## தொண்டமானின்....

( முன்பக்கத் தொடர்ச்சி )

வரவேற்றுள்ளன. இந்த யோசனைகளுக்கு பெரும் பான்மைக் கட்சிகளிடம் ஆதரவைப் பெறவேண்டி தமிழ்கட்சிகள் சந்திப்புகள் பேச்சுவார்த்தைகளை தென்னிலங்கையில் ஆரம்பித்துள்ளன.

நாம் சர்வகட்சி மாநாட்டில் முன்வைத்த எட்டம்ச கோரிக்கைகளை ஒத்ததாக தொண்டமானின் யோசனைகள் இருப்பதால் நாம் ஆதரிக்கின்றோம். இந்த யோசனைகள் குறித்து அனைத்து தமிழ் முஸ்லிம் கட்சிகளுடனும் பேச்சு வார்த்தைகளை தொண்டமான் நடாத்த வேண்டும் என தமிழ் கட்சிகள் கூறியுள்ளன.

தொண்டமானின் யோசனைகளுக்கு ஆதரவு திரட்டு முகமாக சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி உட்பட ஏனைய அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தி வருகிறோம் எனத் தமிழ் கட்சிகளின் சார்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வன்னி மாவட்ட எம். பி. தோழர். சுகனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## தோழர்.நாபா......

( மூன்றாம் பக்கத் தொடர்ச்சி )

## கொலைகாரப்புலிகள் தப்பியது எப்படி?

தோழர். நாபாவுடன் பதின்மூன்று தோழர்களை கொலைசெய்துவிட்டு ஒற்றைக்கண் சிவராஜன், குண்டுசாந்தன் உட்பட ஆறுபுலிகள் தப்பிச்சென்றபோது, மத்தியசென்னை சட்டம் ஒழுங்கு கமிஷனர் ராதாகிருஸ்ணன் புலிகளைப் பிடிக்க சம்பவ இடத்துக்கு விரையமுறப்பட்டுள்ளார். அந்நேரம் செங்கல்பட்டு டி. ஐ. ஜி. ரஞ்சித்சிங், ராதாகிருஸ்ணனை நாகராஜன் தொலைபேசியில் கூப்பிடுவதாக கூறியுள்ளார். ராதாகிருஸ்ணன் நாகராஜனுடன் தொடர்பு கொண்டபோது, எதுவித நடவடிக்கையும் எடுக்கவேண்டாமென கூறி புலிகளை நாகராஜன் தப்பவிட்டுள்ளார்.
புலிகள் சென்னையிலிருந்து செங்கல்பட்டு, திண்டிவனம், விழுப்புரம் வழியாகத் தப்பிச் சென்றனர். விழுப்புரத்தில் வைத்து டி. எஸ். பி குணம் புலிகளை மடக்கச் சென்றார். டி. எஸ். பி ரஞ்சித்சிங் மூலம் இதனைத் தெரிந்து கொண்ட நாகராஜன், டி. எஸ். பி குணத்துக்கு ரஞ்சித்சிங் மூலமாக வாய்மொழி உத்தரவு பிறப்பித்துத் தடுத்து கொலைகாரப் புலிகளைத் தப்பவிட்டுள்ளார். இப்போது செங்கை எம். ஜி. ஆர் கிழக்கு மாவட்ட எஸ். பியாகவுள்ள ராதாகிருஷ்ணன், சென்னை வண்ணாரப்பேட்டையில் சட்டம் ஒழுங்கு உதவிக்கமிஷனராக உள்ள குணம் ஆகியோர் எழுத்து மூலமாக நடந்த சம்பவங்களை விளக்கி அரசுக்குஅறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

## முன்னாள் டி. ஜி. பி துரை தற்கொலை

கைதுசெய்யப்பட்ட அனந்தராஜ், சிகாமணிமூலமாக தோழர். நாபா படுகொலையில் புலிகளுக்கு டி. ஜி. பி துரையும் உதவி செய்துள்ளார் என்பது தெரியவந்தது. இது ஏற்கனவே கைது செய்யப்பட்ட புலிகளிடமிருந்தும் கிடைத்திருந்தது. தான் பத்மநாபா கொலைவழக்கில் கைதுசெய்யப்படப் போகிறோம் என்பதை டி. ஜி. பி துரை தெரிந்து கொண்டார். தான் டி. ஜி. பி யாகக் கோலோச்சிய அதே அலுவலகத்தில் பத்மநாபா கொலையின் குற்றவாளியாக விலங்கோடு நிற்கப் போகிறோமே என்பதனை எண்ணிப் பார்த்த டி. ஜி. பி துரை விஸ்கியுடன் தூக்க மாத்திரைகளை கலந்து சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார். நாகராஜன், ரவிச்சந்திரன், துரை ஆகியோரைக் கைது செய்வதற்கு அனந்தராஜின் வாக்குமூலம், விக்கியின் வாக்குமூலம் ஆகியவை போதுமானதாக இருந்தது. டி. ஜி. பி துரையின் தற்கொலையைக் கண்ட பொலிசார் நாகராஜனும், ரவிச்சந்திரனும் கூடத் தற்கொலை செய்துகொள்ளலாம் என நினைத்து உடனே அவ்விருவரையும் கைது செய்தனர்.

தோழர். நாபாமற்றும் தோழர்கள் கொலை செய்யப்பட்டபோது டி. ஜி. பி யாக இருந்த துரை சென்னை கோடம்பாக்கம் மேம்பாலத்தில் காரிலே வந்து கொண்டிருந்தார். தோழர். நாபா தங்கியிருந்த சர்க்காரியாக் காலனியில் துப்பாக்கிச் சத்தம் கேட்டது. சர்க்காரியாக் காலனி துரை வந்து கொண்டிருந்த கோடம்பாக்கம் மேம்பாலத்துக்கு நேர் கீழே உள்ளது. துப்பாக்கிச் சத்தம் கேட்டவுடன் காரை ஓட்டிவந்த பொலிஸ் சாரதி வண்டியை வேகம் குறைத்தார். "ஐயா அங்கு சுடும் சத்தம் கேட்கிறது" என்று சொன்னார். "அது கேட்கட்டும் போய்யா நீ" என்று துரை கூறவே சாரதி பேசாமல் வண்டியை ஓட்டிச் சென்றுவிட்டார்.

தோழர். நாபா கொலை செய்யப்படப் போவது துரைக்கு ஏற்கனவே தெரிந்திருக்கிறது. ஆனால் புலிகளிடமிருந்து பெற்றபணம் அவர் வாயைக் கட்டிப் போட்டது. அதற்கு நன்றிக்கடனாக துரை பி. பி. சி க்கு அளித்த பேட்டியொன்றில் "பத்மநாபா படுகொலையை புலிகள் செய்யவே இல்லை" என்று ஓங்கி அடித்தார்.

ஆனந்தன் - டென்மார்க்

( தகவல்கள்: தராசு, இந்தியா டுடே )

படிப்பகம்

www.padippakam.com



# தோழர் நாபா படுகொலை தொடர்பாக தமிழக முக்கிய பிரமுகர்கள் பலர் கைது

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமும் தமிழ் பேசும் மக்களின் பாசமிகு தலைவருமாயிருந்த தோழர். க. பத்மநாபா அவர்களும், அவருடன் சேர்ந்து எமது அன்புத்தோழர்கள் பதின்மூன்று தோழர்கள், சென்னை சர்க்காரியா காலனியில் வைத்து பாசிசப் புலிகளால் கோழைத்தனமாக 19.6.1990 அன்று படுகொலை செய்யப் பட்டார்கள். அன்று ஆட்சியிலிருந்த கருணாநிதி அரசு கொலையாளிகள் தப்பிப் போக உதவியதோடு, மேலதிக நடவடிக்கைகள்; வழக்குகள்; விசாரணைகள் எதுவுமின்றி முற்றுப்புள்ளி வைத்தது.

ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. ஜெயலலிதா தலைமையில் அ. தி. மு. க. அரசு அமைத்தது. தோழர். நாபாவின் சென்னைப்படுகொலையை விசாரிக்க விசேட பொலிஸ் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. பொலிசார் மேற்கொண்டு வரும் விசாரணைகளில் தோழர். நாபாவின் படுகொலையின் சூத்திரதாரிகள் யாவரும் அம்பலப்படுத்தப்பட்டுள்ளனர். தான் வாழ்ந்த காலத்திலும் புலிகளின் பாசிசப்போக்கை துணிவுடன் பகிரங்கமாக எதிர்த்து வந்த தோழர். நாபாவின் படுகொலையானது, புலிகளின் பாசிசப்போக்குக்கு சாவுமணிஅடிப்பதாயே அமைந்துள்ளது.

தோழர். நாபா கொலைவழக்கில் முதலில் பதினெட்டுபேர் கைதாகினர் மேலும் கொலையாளிகளை மறைத்து வைத்து தப்பிக்க வழிவகுத்தனர் என ஜெயபாலசிங்கம், சந்திரவதனா ஆகிய இரு புலிகளின் ஆதரவாளர்கள் சென்னையில் வைத்து கைது செய்யப்பட்டனர். இலங்கையை சேர்ந்த இவ்விருவரில் ஜெயபாலசிங்கம் சென்னையில் திரைப்பட விநியோகஸ்தராக செயற்பட்டுவந்தார். சந்திரவதனாவின் கணவர் லண்டனில் வசிக்கிறார்

மருதநாயகம் என்னும் வழக்கறிஞர் கைது செய்யப்பட்டுள்ளார். விக்கி எனப்டும் விக்கினேஸ்வரன் என்னும் புலி ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தார். இவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்திலிருந்து தோழர். நாபா கொலையில் பங்கு கொண்ட தமிழகத்தை சேர்ந்த பலர் கைதாகியுள்ளனர். தோழர். நாபாவின் கொலையை முடித்த பின் விக்கி, டிக்ஸன் (சயனைட்தற்கொலையை மேற்கொண்டவர்) குண்டு சாந்தன், அருணாஆகியோர் திருச்சியில் தலைமறைவாக இருந்த போது வழக்கறிஞர் மருதநாயகம் தமக்கு ஆதரவு அளித்ததாக விக்கி கூறியதையடுத்தே மருதநாயகம் கைதானார்

தோழர். நாபா கொலையில் முக்கிய பங்கு வகுத்த குண்டுசாந்தன் என்னும் புலி திருச்சி நகர்புற வீடொன்றில் வைத்து சீ. பி. ஐ. பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டபோது சயனைட் அருந்தி தற்கொலை செய்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட வழக்கறிஞர் மருதநாயகம் தோழர். நாபாவின் கொலைக்கு முன்பும் பின்பும் யாழ்ப்பாணம் சென்றிருக்கிறார். அங்கு புலிகளை சந்தித்து போட்டோக்கள் எடுத்துள்ளார். பிரபாகரனுடன் சேர்ந்தும் படம் எடுத்துள்ளார். இதற்கான ஆதாரங்களாக நாற்பது போட்டோக்கள் பொலிசாரிடம் சிக்கியுள்ளது. திருச்சி தில்லைநகரில், குண்டுசாந்தன், விக்கி, கிருபன், அருணா, டிக்ஸன் ஆகிய புலிகள் தங்க மருதநாயகம் வீடு ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார். தோழர். நாபாவை படுகொலை செய்வதற்கு இந்த வீட்டிலேயே கொலைச்சதி உருவாகியுள்ளது. அதுமட்டுமல்ல கொலையை முடித்துவிட்டு புலிகள் இந்த வீட்டிலேயே ஒளிந்திருந்துள்ளனர் என்பது பொலிசாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## வை. கோபாலசாமியின் தம்பி கைது

கருணாநிதி ஆட்சியில் தி. மு. க. எம். பியாக இருந்தவர் வை. கோபாலசாமி. இவர் கருணாநிதி சார்பில் பிரபாகரனுடன் தொடர்புகளை வைத்திருந்தவர். இவர் பிரபாகரனுக்கு கொடுத்த வாக்குறுதியால் காயம்பட்ட புலிகளுக்கு தனது தம்பியான ரவிச்சந்திரனின் வீட்டில் வைத்து சிகிச்சை அளிக்க ஒழுங்குகள் செய்துள்ளார். தோழர். நாபா கொலைவழக்கில் முக்கிய குற்றவாளிகளான குண்டுசாந்தனும், சிவத்தானும் திருச்சியில் தங்கியிருந்தபோது அந்நகருக்கு கொண்டுவரப்பட்ட காயம்பட்ட புலிகளைப் பாதுகாக்கும் பொறுப்பு சிவத்தானிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பொலிசாரின் சுற்றிவளைப்பின் போது குண்டுசாந்தன் சயனைட் அருந்தித் தற்கொலை செய்துகொள்ள சிவத்தான் தப்பியோடியுள்ளார். திருச்சியிலிருந்து தப்பியோடிய சிவத்தான் நெல்லைப்பகுதிக்கு வந்துள்ளதாகப்பொலிசுக்குதகவல் கிடைத்தது. கியுபிரான்ஞ் டி. எஸ். பி. பலவேஷபாண்டியன் தலைமையில் பொலிஸார் மகாராஜா நகரிலுள்ள வை. கோபாலசாமியின் தம்பியான ரவிச்சந்திரன் வீட்டை முற்றுகையிட்டனர். அங்கு பத்து புலிகளும் ரவிச்சந்திரனும் கைதுசெய்யப்பட்டனர்.

## உட்துறைச் செயலாளர் நாகராஜன் கைது.

தோழர். நாபாவின் கொலைக்கு முன்பும் பின்பும் கொலைகாரப் புலிகளுக்கு பலவழிகளிலும் உதவிய கருணாநிதியின் வலதுகரமான முன்னாள் உட்துறைச்செயலாளர் நாகராஜன் கைதானதைத் தொடர்ந்து தோழர். நாபா கொலையில் உள்ள சதித்திட்டங்களில் பெரும்பகுதி முடிச்சு அவிழ்ந்துள்ளது.

அண்மையில் தமிழ்நாட்டில் ஆயுதங்களுடன் பிடிபட்ட கப்பலில் சிக்கிய டயறியில், பலவிலாசங்கள் சிக்கின. அவற்றில் திருச்சியிலுள்ள விலாசங்களை, திருச்சி எஸ். பி. ஜெகநாதன் தலைமையிலான பொலிஸ்பிரிவு விசாரணையை மேற்கொண்டது. அவற்றில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அனந்தராஜ், தெய்வசிகாமணி ஆகியோரை கைதுசெய்து விசாரித்தனர். அனந்தராஜ் என்பவர் தோழர். நாபா கொலைவழக்கில் குற்றவாளியான கோவையில் கைதான விக்கியின் சித்தப்பா.

அனந்தராஜ், சிகாமணி ஆகியோர் திருச்சி உறையூர் பொலிஸ்நிலையத்தில் வைத்து இன்ஸ்பெக்டர் காளிமுத்துவால் விசாரிக்கப்பட்டனர். முன்னாள் உள்துறை செயலாளர் நாகராஜன், முன்னாள் டி. ஜி. பி. துரை ஆகியோரின் பெயர்களை உச்சரித்துள்ளனர்.

தோழர். நாபா கொலைக்கு முன்பிருந்தே குண்டுசாந்தன், டிக்ஸன் ஆகியோர் நாகராஜனின் நேரடிப்பாதுகாப்பில் பலமுறை இருந்திருக்கின்றனர் என்றும் டி. ஜி. பி. துரை உதவிசெய்துள்ளதாகவும் அனந்தராஜ் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து திருச்சி எஸ். பி. ஜெகநாதன் அசோக்நகரிலுள்ள நாகராஜன் வீட்டில்வைத்து அதிகாலை இரண்டுமணிக்கு நாகராஜனை கைதுசெய்தார்.

நாகராஜன் வாக்குமூலம் கொடுக்குமுன்பு கருணாநிதி, டி. ஆர். பாலு என்பவரையும் நாகராஜனின் மகன் ராமமூர்த்தியையும் நாகராஜனைச் சந்தித்து வாக்குமூலம் கொடுப்பதைத்தடுக்க அனுப்பினார். ஆனால் நாகராஜன் டி. ஆர். பாலுவைச்சந்திக்க மறுத்துவிட்டார். நாகராஜன் தனதுவாக்குமூலத்தில், ரகசியப் பொலிஸ் டி. ஐ. ஜி. ஜாபர்அலி, முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி, முன்னாள் தலைமைச்செயலாளர் எம். எம். ராஜேந்திரன் ஆகியோரைப்பற்றி குறிப்பிட்டுள்ளார்.

ஜாபர்அலி கருணாநிதியின் நெருங்கிய சகா. தினசரிகாலையில் கருணாநிதியும் ஜாபர்அலியும் பலவிடயங்கள் பற்றி அலசுவார்கள். அப்போது யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. கருணாநிதியின் வாய்மொழி உத்தரவுகள் ஜாபர்அலி மூலம்தான் தெரியவருமென நாகராஜன் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

தோழர். நாபா கொலையை விசாரித்துவரும் சிறப்புப் பொலிஸ்பிரிவினர் ஜாபர்அலி தொடர்பாக மேலும் பல தகவல்களைச் சேகரித்துள்ளனர். தாம் கைதுசெய்யப்படலாம் எனத்தெரிந்துகொண்ட ஜாபர்அலி வாக்குமூலம் கொடுக்கமுன்வந்துள்ளார். ஜாபர்அலிக்குத் தெரியாமல் தமிழகத்தில் புலிகள் விவகாரம் எதுவுமே நடந்ததில்லை. ஜாபர்அலியின் வாக்குமூலம் கருணாநிதிக்கு பலசங்கடங்களை ஏற்படுத்தும்.

( இரண்டாம் பக்கம் பார்க்க )

படிப்பகம்

www.padippakam.com



# தோழர்களின் நினைவுகளில்...

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆரம்பகால உறுப்பினரும், சர்வதேச போராட்டசூழலுடன் தன்னை பரந்த அளவில் இணைத்துக்கொண்டு வாழ்ந்தவருமான எமது பாசமிகு தோழர் ஜோர்ஜ் எம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது

10.1.90 அன்று வடக்கு கிழக்கு மாகாண அரசின் தலைமைச்செயலகம் அமைந்திருந்த திருகோணமலையிலிருந்து , நிலாவெளியில் ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டத்தில் உரையாற்றுவதற்காக ஜீப்பில் சென்றுகொண்டிருந்த வேளையில் தோழர் ஜோர்ஜ்சும் சகதோழர்களும், ஸ்ரீ லங்கா இராணுவமுகாமில் முன்புறத்தில் பலதடைகளை ஏற்படுத்தி இராணுவத்தின் கூட்டுமுயற்சியுடன் புலிகள் பதுங்கியிருந்து தாக்கியதில் படுகொலை செய்யப்பட்டார்கள்.

பாசிசப்புலிகளின் பேடித்தனமான படுபாதக கொலைக்குப்பலியாகிப்போனதோழர் ஜோர்ஜ் திருகோணமலையில் ஒரு படித்த மத்தியதர வர்க்க குடும்பத்தில்பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்கல்வி வரை திருமலை சென் ஜோசப் கல்லூரியில் பயின்றவர். பிற்காலத்தில் ஜேர்மனியிலும் கல்விபயின்றார். தோழர் ஜோர்ஜின் போராட்டகுணாம்சமும் வேலைத்திட்டமும் தமிழ்பேசும் மக்களின் தேசியவிடுதலைப் போராட்டத்தின் அர்ப்பணிப்புகளுடன் குறுகிவிடாது, உலகளாவிய ரீதியில் பரந்த சர்வதேசியக் கண்ணோட்டம் கொண்டவராகவும் இருந்தார். ஈரோஸ் என்னும் சந்தர்ப்பவாத தலைமையை அன்றே நிராகரித்து, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சர்வதேச வேலைத்திட்டங்களில் தன்னை இணைத்துக் கொண்டார்.

தோழர்.ஜோர்ஜ் ஜேர்மனி, பலஸ்தீனம், நிக்கரக்குவா, தென்னாபிரிக்கா, மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளிலுள்ள முற்போக்கு போராட்ட சக்திகள் மத்தியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வேலைத்திட்டங்களை ஆழப்படுத்துவதிலும், சர்வதேச ஒடுக்கப்படும் மக்களின் போராட்ட அனுபவங்களை கற்றுக் கொள்வதிலும், ஈழமக்களின் நியாயபூர்வமான சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்கும் வேலைத் திட்டங்களிலும் பங்கெடுத்துக் கொண்டார்.

குறிப்பாக நிக்கரக்குவா புரட்சியின் இறுதிக் காலகட்டத்திலும், புரட்சியின் பின் நாட்டைக் கட்டியெழுப்புவதிலும் சண்டினிஸ்டுகளுக்கு தலைமை தாங்கி உழைத்த தோழர் கார்லோஸ் பொன்சேகா, மற்றும் நிக்கரக்குவாவின் முன்னாள் அதிபர் தோழர். டானியல் ஒட்டேகா போன்றோரின் நெருங்கிய நண்பராகவும் விளங்கியதுடன், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளும், நிக்கரக்குவாவின் எதிர்ப் புரட்சியாளர்களாகவும் விளங்கிய 'கொண்ட்ரா' படைகளுக்கு எதிரான சண்டினிஸ்டுகளின் போர் முனைகளிலும் தோழர். ஜோர்ஜ் நேரடியாகப் பங்கெடுத்து கொண்டார்

ஏனைய லத்தீன் அமெரிக்க விடுதலைப் போராட்ட இயக்கங்களோடும், பெண் விடுதலை அமைப்புகளோடும் இவரது உழைப்பு இணைந்திருந்தது. சர்வதேசமெங்கும் ஒடுக்கப்பட்ட உழைக்கும் தொழிலாள வர்க்கத்தின் விடுதலைக்காக குரலெழுப்பிய ஸ்தாபனங்கள் பலவற்றோடு இணைந்து பணியாற்றியதோடு, இப்புரட்சிகரமான வேலைத் திட்டங்களில் பணியாற்றும் போது பெற்றுக்கொண்ட அனுபவச் செழுமைகளை தான் சார்ந்திருந்த ஸ்தாபனத்தினுள் புகுத்துவதிலும், ஸ்தாபனம் சரியான சர்வதேச கண்ணோட்டத்துடன் எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்பதிலும் அக்கறை உடையவராக இருந்தார். ஸ்தாபனத்தின் பேரில் சர்வதேச வேலைத் திட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தோழர்.ஜோர்ஜ், 87இன் பிற்பகுதியில் ஸ்தாபனத்தின் அழைப்பின் பேரில் தாயகம் திரும்பினார்.


அன்புத் தோழர்.ஜோர்ஜ்

புலிகளின் பதவி மோகத்தினால் ஏனைய சகோதரப் போராட்ட இயக்கங்களைத் தடைசெய்தும், மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப் பட்டிருந்த வேளையில் மறுபுறமாக பேரினவாத ஸ்ரீ லங்கா அரசு மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகளையும், கிழக்கில் திட்டமிட்ட ரீதியான சிங்களக் குடியேற்றத்தையும் வேகமாகச் செயல்படுத்தி வந்தது. இந்நிலையில் மக்கள் மத்தியில் போராட்டம் தொடர்பாக எழுந்துள்ள அவநம்பிக்கைகளையும் இடைக்கால அமைதியாவது தேவை என்ற எண்ணத்தையும் பரவலாகத் தோற்றுவித்தது.

இவ்வேளையில் இலங்கை இந்தியஒப்பந்தம் உருவானது. மக்கள் இதனை ஆதரித்தனர். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது, புலிகளால் பலவீனப்படுத்தப்பட்டிருந்த போராட்ட சூழலை கவனத்தில் கொண்டும்,
தமிழ்பேசும் மக்களின் அன்றிருந்த மனோநிலையை கருத்தில் கொண்டும் தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை புதியபோக்கின் அடிப்படையில் முன்னெடுக்க வேண்டிய தேவையை உணர்ந்து இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை ஆதரித்ததுடன், அதற்கான அரசியல் வேலைத்திட்டத்தை ஆரம்பித்தது.

இவ்வேளையில் தோழர். ஜோர்ஜின் தலைமையிலான நேரடியான வேலைத் திட்டம் திருகோணமலை மாவட்டத்தில் ஆரம்பமானது. பேரினவாத சக்திகளின் சூழ்ச்சிகளையும், சதிகளையும் திருகோணமலை மண்ணில் உடைத்தெறிவதும், பாசிசப்புலிகளின் ஜனநாயக மறுப்புப் போக்குகளையும், மக்கள் விரோத நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துவதும் அவசியமானது என்னும் அடிப்படையில் தனது வேலைகளை ஆரம்பித்தார். இவ்வேளையில் தோழர். ஜோர்ஜ் சர்வதேசப் போராட்ட சூழலில் கற்றுக்கொண்ட அனுபவங்கள் பேருதவியாக இருந்தன.

தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கு - கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடமாகும். வடக்கு கிழக்கை இணைக்கும் பாலமாக திருகோணமலை திகழ்கின்றது. திருகோணமலை திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் நிரப்பப் பட்டு தமிழ்பேசும் மக்கள் விரட்டப்பட்டால் வடக்கு-கிழக்கு இணைப்பு பேரளவில்தான் இருக்குமென்பதனை கணக்கிட்டு திருகோணமலையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை பேரினவாத அரசு மேற்கொண்டது. திருகோணமலை இயற்கைத் துறைமுகமாதலால் அங்கு ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு புகலிடம் அளிப்பதன் மூலம் தானடையும் லாபங்களையும் கணக்குப் போட்டு பேரினவாத அரசு திருகோணமலையை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டி திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டது.

இந்நிலையில் வடக்கு - கிழக்கு இணைப்பில் திருகோணமலையின் அவசியத்தை உணர்ந்தும் ஏகாதிபத்தியக் கைக்கூலிகள் திருகோணமலையில் முகாமிடுவது இந்திய உபகண்ட அமைதிக்கு அச்சுறுத்தலாகும் என்பதனைக் கவனத்தில் கொண்டும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி திருகோணமலையை வட-கிழக்கின் தலைநகராக்கியது.

சிங்களப் பேரினவாத அரசுகளால் திருகோணமலையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களை நியாயபூர்வமான அடிப்படையில் அணுகி அவைகளை அகற்றுவதில் தோழர் ஜோர்ஜ் ஈடுபட்டார். திருகோணமலை மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சிங்கள நிர்வாக அமைப்பு முறையை உடைத்தெறிவதில் தோழர்ஜோர்ஜ் பெரும் பங்காற்றினார்.

வடக்கு கிழக்கு மாகாண அரசுக்கான அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கைகளில் தோழர்.ஜோர்ஜின் வித்தியாசமான அணுகுமுறைகள் வரலாற்றில் என்றுமே மறக்க முடியாதவை.

இதனாலேயே மாகாண அரசின் நிர்வாக மட்டத்திலும் மக்கள் மத்தியிலும் தோழர் ஜோர்ஜின் அணுகு முறைகள் 'ஜோர்ஜ் முறை' என்று பேசப்படும் அளவுக்கு சிறந்து விளங்கியது.

மாகாணசபை உறுப்பினராக திருகோணமலை மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்.ஜோர்ஜ் மாகாண அரசில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரதம கொறடாவாக நியமிக்கப்பட்டார். இவருடைய நேரடியான கண்காணிப்பில் திருகோணமலை மாவட்டத்தில் பலவிதமான அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப் பட்டன.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தின் தலைநகராக விளங்குவதற்குரிய அனைத்துத் தகுதிகளையும் பெற திருகோணமலையை குறுகிய காலத்தில் அபிவிருத்தி அடையச்செய்வதற்கு தோழர் ஜோர்ஜின் அணுகு முறைகள் முக்கியமானவை.

திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள் காடையர்களால் தமிழ்பேசும் மக்கள் காலத்துக்கு காலம் தாக்கப் பட்ட வேளையில் அங்கிருந்த தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கெட்டுச் சென்ற காலம் போய் திருகோணமலையில் மக்கள் காடையர்களுக்கு பயமில்லாமல் வாழலாம் என்றநிலையை மக்களோடிணைந்து தோழர்.ஜோர்ஜ் உருவாக்கினார்.
இதன் அடிப்படையில் அப்பிராந்தியத்தில் பல தசாப்தங்களாக வாழ்ந்துவந்த சிங்கள மக்கள் மத்தியிலுள்ள இடதுசாரி சக்திகளுடனும், தீவிரவாத முற்போக்கு சக்திகளுடனும் நேரடியான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு தோழர்.ஜோர்ஜ் செயற்பட்டார்.
தோழர்.ஜோர்ஜின் இந்நடவடிக்கைகள் பேரினவாத சக்திகளுக்கும் அவர்களின் கூட்டாளிகளான பாசிசப் புலிகளுக்கும் சகிக்கப்பட முடியாதவையாக இருந்தன. ஏனெனில் தோழர்.ஜோர்ஜின் நடவடிக்கைகள் அனைத்தும் பேரினவாத சக்திகளின் நோக்கங்களுக்கு எதிரானவையாகவும் பாசிசப் புலிகளின் வளர்ச்சிக்கு பாதகமானதாகவும் இடையூறானதாகவும் இருந்தமையால் இந்த ஏகாதிபத்திய தாசர்களுக்கு மக்கள் தோழர். ஜோர்ஜை படுகொலை செய்யவேண்டிய தேவை உருவானது.

அதன் காரணமாக மிகவும் கேவலமான பேடித்தனமான முறையில் படுகொலை செய்யப் பட்டார். இவ்வொடுக்கு முறையாளர்களின் கூட்டுச் சதியால் மரணத்தைத்தழுவிய தோழர்.ஜோர்ஜின் இடைவெளியினால் இன்று வடக்கு கிழக்கின் அவலத்தையும், புலிகளின் அரசியல் வறுமையால் பேரினவாதிகளின் கைகள் ஓங்கியிருப்பதையும் மக்கள் உணர்கிறார்கள். திருகோணமலையில் வேகமாக மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தும் பயப்பீதி தோழர். ஜோர்ஜை மக்கள்

( ஐந்தாம் பக்கம் பார்க்க )

படிப்பகம்

www.padippakam.com



# ஈழப்போராட்டம் என்ன புலிகளின் ஆதிக்கப் போராட்டமா? மக்களே! சிந்தியுங்கள்!!

ஈழப் போராட்ட வரலாற்றில் எந்த வித போராட்டத் திட்டம் (Strategy) போர்த்தந்திரம் (Tactics) இல்லாமல் கள்ளக்கடத்தல், கொலை கொள்ளை செய்துகொண்டிருந்த ஓர் குழு எப்படி ஓர் அரசியல் மூலாம் பூசப்பட்ட குழுவாக வளர்ந்தது என்பதையும், அதனால் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களையும் அதனால் ஈழப்போராட்டம் பல ஆண்டுகளுக்கு பின்தள்ளப் பட்டுள்ளதையும், உண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகள் எதற்காகப் போராடுகிறார்கள் என்பதையும் சுருக்கமாகப் பார்த்தோமானால் புலிகள் ஓர் சர்வாதிகார ஆட்சி நடத்த முயல்வதை உணர்ந்து கொள்ள முடியும்.

இவர்கள் தமிழீழப் போராட்டம் என்ற போர்வையில் தமது ஆயுத ஆதிக்கத்தை நிலை நிறுத்த தமது ஆயுத பலத்தைப் பாவித்து செய்யும் அராஜகங்களோ, அட்டகாசங்களோ, அழிவுகளோ ஏராளம்.

இவர்களது இந்தப் பிழையான போர்த் திட்டத்தால் ஏனைய இயக்கங்கள் எல்லாவற்றையும் அழித்தார்கள். அதனால் இது வரை 6000 போராளிகள் வரை அழிக்கப் பட்டதாக அறியப் படுகிறது. இரண்டு இலட்சத்துக்கு மேலான அகதிகள் வரை ஐரோப்பிய நாடுகட்கும் இரண்டு இலட்சம் அகதிகள் வரை இந்தியாவுக்கும் விரட்டியடித்து கலைக்கப்பட்டுள்ளார்கள் இவர்களில் குறைந்தது 50,000 இளைஞர்கள் வரை பல இயக்கங்களிலும் பயிற்சி பெற்றுப் போராடும் திறனுடையவர்கள். இவர்கள் தற்சமயம் உலகின் பல பகுதிகளிலும் அனாதைகளாய் அலைகிறார்கள்.

அது மட்டுமல்ல தமிழீப் பகுதிகளில் கூடுதலான பகுதிகள் புலிகளின் பிழையான போர்க் தந்திரத்தால் ஸ்ரீ லங்கா படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்து கொண்டிருக்கின்றன.
கிழக்கு மாகாணம் முழுவதும், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் குடாநாட்டுக்குள் தீவுப்பகுதிகள், பலாலி, கீரிமலை அராலி ஆனையிறவு பகுதிகள் யாவும் ஸ்ரீ லங்காப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இதைப் புலிகளும் அவ்வப்போது ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

வடக்குக்கிழக்கு மக்களின் உடமைகளில் பெரும்பகுதிஅழிக்கப் பட்டதோடு, மிகுதி புலிகளினாலும் அரசபடைகளினாலும் சூறையாடப்பட்டுள்ளன. ( யாழ்ப்பாணம், மன்னார் முஸ்லீம் மக்களை விரட்டியடித்து அவர்களின் சொத்தைப் புலிகள் சூறையாடினார்கள் )

இப்படியான புலிகளின் ஆதிக்க வெறியினால் ஏற்பட்ட அழிவினால் ஈழப்போராட்டம் சிதைந்து அழியும் நிலைக்கு வந்து விட்டது. தற்போது புலிகள் குடாநாட்டுக்குள் முடக்கப்பட்டு, எல்லாப் பக்கத்தாலும் ஸ்ரீ லங்காஇராணுவம் எப்போ போரைத் தொடங்குவார்களோ என்ற பயத்தில் செத்துக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் எந்நேரமும் தாம் அநியாயமாகக் கொல்லப்படலாம் என்ற மரண பயத்தில் நடுங்குகிறார்கள்.
இந்நிலையிலும் புலிகள் தமது ஆதிக்க வெறியை நிறுத்தியதாகத் தெரியவில்லை. தமது ஆயுதபலவாதத்தைக் காட்டி தமிழ்பேசும் மக்களின் ஒரே வாரிசு தாம்தான் என தமது ஆதிக்க நிலையை பல அழிவுக்கு மத்தியில் கொண்டு வந்தனர். இப்போ தாம் அதிகாரம் செலுத்தவேண்டுமானால் இந்த ஆதிக்க நிலைமையை தொடர்ந்து வைத்திருக்க வேண்டும்.

அதனாலேயே உதவிக்கு வந்த இந்திய அமைதிப் படைக்கு எதிராக எமது பொது எதிரியான ஸ்ரீ லங்கா இராணுவத்தோடு இணைந்து போரிட்டார்கள். பின் இந்திய அமைதிப்படை அகப்புறக் காரணங்களால் திரும்பிப் போகவேண்டிய நிலை ஏற்பட்டது. இதை புலிகள் தாம் உலகின் நான்காவது பெரிய இராணுவத்தையே அடித்து கலைத்து விட்டோமென எக்காளமிட்டார்கள்.

பின் இதே புலிகள் தாம் காதல் நடாத்தி கள்ளக் கலியாணமும் புரிந்திருந்த (ஒக்டோபர்-87 - யூன் 90 வரை) ஸ்ரீ லங்கா இராணுவத்தோடு யூன் 90 ல் மோதத் தொடங்கி பதினெட்டு மாதங்களாகிறது. கிடைத்த அதிகாரங்களும்போய் புலிகள் படுதோல்வி அடைந்து குடாநாட்டுக்குள் முடக்கப் பட்டதுதான் மிச்சம். இந்த 18 மாதங்களில் 12 ஆயிரம் பேர் வடக்கு கிழக்கில் கொல்லப்பட்டுள்ளனர்.

புலிகளின் இந்த ஆதிக்கவெறி பற்றியும் அதைப்பெற அவர்கள் கூறிய ஆயுத பலவாதம் பற்றியும் பார்ப்போமானால், இவர்கள் ஆயுதத்தால் எதையும் செய்யலாம், சாதிக்கலாம் என்ற வறட்டு சித்தாந்தத்தில் ஊறியவர்கள் என்பது புலனாகும்.
இதை இவர்களது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறும் போது 'எம்மை அடிமைப்படுத்தி வைத்திருப்பது சிங்கள மக்கள் அல்ல. சிங்கள மக்களிடம் உள்ள ஆயுதம் தான்' என்றும், 'ஆயுதம் தான் உலகத்தை ஆளுகிறது. ஆயுதம்தான் அதிகாரம் என்பதும்; சர்வஅதிகாரம் என்பதும்' என்றும், 'ஆயுதந்தான் இன்று உலகத்தை ஆட்டிப்படைக்கும் அதிவல்ல சக்தியாக விளங்குகிறது. மனிதனை மனிதன் அடிமை கொள்வதும் இந்த ஆயுதந்தான்' என்றும் தனது 'தமிழீழமும் ஆயுதப் புரட்சியும்' என்ற பிரசுரத்தில் கூறியுள்ளார்.

இந்த ஆலோசகரின் வறட்டு சித்தாந்தத்தை வைத்துக் கொண்டுதான் புலிகள் குழுவினர்தமிழீழம் எடுக்க முன்பே ஏனைய தமிழ் குழுக்களை அழித்து தமது ஆதிக்கத்தை எடுத்துக் கொண்டனர். எல்லா நாடுகளிலும் ஓர் புரட்சி அல்லது விடுதலை பெற்ற பின்தான் இயக்கங்கள் ஆதிக்கத்துக்காக அடிபடுவதுண்டு. ஆனால் புலிகளின் அகராதியில் ஈழம் கிடைக்கா விட்டாலும் ஆதிக்கம் கிடைக்க வேண்டும் அதைத் தொடர்ந்து அதிகாரமும் தமக்கே வரவேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார்கள் என்பதனை இவர்களது நடவடிக்கைகள் மூலம் சாதாரண பாமர மக்களும் உணரமுடியும்.

> ஆயுதமே இந்த உலகத்தை ஆளுகிறது என்னும், புலிகளின் ஆலோசகரின் வறட்டுச் சித்தாந்தத்தை வைத்துக் கொண்டுதான் புலிகள் தமழீழம் எடுக்கு முன்பே ஏனைய தமிழ் குழுக்களை அழித்து தமது ஆதிக்கத்தை எடுத்துக் கொண்டனர். எல்லா நாடுகளிலும் ஓர் புரட்சி அல்லது விடுதலை பெற்ற பின்னர் தான் இயக்கங்கள் ஆதிக்கத்துக்கு அடிபடுவதுண்டு. ஆனால் புலிகளின் அகராதியில் ஈழம் கிடைக்கா விட்டாலும் ஆதிக்கம் கிடைக்க வேண்டும். அதைத் தொடர்ந்து அதிகாரமும் தமக்கே வரவேண்டும் என்பதில் குறியாக உள்ளார்கள் என்பதை இவர்களின் நடவடிக்கைகள் மூலம் உணரமுடியும்.

இவர்கள் தமது ஆயுத பலவாதத்தால் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்த ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ். கூட்டணி, ரெலா ஆகிய இயக்கங்களின் போராளிகள், தலைவர்கள் பலரைச் சுட்டும், எரித்தும், வெட்டியும் அழித்துள்ளனர். அத்துடன் தமிழீழப் பகுதியில் எந்த ஒரு இயக்கமும் இயங்கக் கூடாது என தடை விதித்தும் உள்ளனர்.

இந்திய அமைதிப்படை விலகியதும் ஸ்ரீ லங்கா இராணுவத்தோடு சேர்ந்து தமிழ் தேசிய இராணுவத்தை(ரி.என்.ஏ) அழித்தனர். இதில் நூற்றுக் கணக்கான தமிழ் போராளிகள் கொல்லப் பட்டனர். அதே சமயம் சரணடைந்த நூற்றுக் கணக்கான தமிழ்தேசிய இராணுவத்தை அம்பாறை காட்டுப் பகுதிக்கு கொண்டு போய் சுட்டுக் கொலை செய்தார்கள்.

இவர்களின் காட்டு மிராண்டித் தனமான இந்த அட்டகாசங்களுக்குத்தப்பி ஆயிரக் கணக்கான மக்கள் படகுகளிலும், வள்ளங்களிலும் இந்தியாவுக்கு போய்க்கொண்டிருந்தார்கள். இதைக் கண்ட புலிகள் தமிழ் அகதிகள் இந்தியாவில் அதிகமானால் இந்திய அமைதிப்படை போவது தாமதமாகலாம் என எண்ணி ஸ்ரீ லங்கா கடற்படையோடு சேர்ந்து தமது சொந்த மக்களையே கடலில்வைத்து சுட்டு படகுகளை கடலில் கவிழ்த்தார்கள். இதனாலும் நூற்றுக் கணக்கான வயோதிபர்களும் சிறுவர் பெண்கள் உட்பட பலர் கடலில் மூழ்கடித்து சாகடிக்கப் பட்டார்கள்

1990 தை மாதத்தில் மட்டும் இலங்கை இந்தியக் கரைகளில் நானூறுக்கும் அதிகமான சடலங்கள் கரை ஒதுங்கின. இந்தக் கொலைகளுக்கு பின் இவர்களது ஸ்ரீ லங்காவுடனான காதல் உறவு ஓர் முடிவுக்கு வந்தது.
இவர்களின் ஆதிக்க வெறியைப் பார்க்கும் போது இவர்களது ஆயுதப்பலவாதம் கிட்லர், சாசக்கியூ, பொல்பொட் ஆகியோர்களிலும் பார்க்க படுமோசமாக போய்க் கொண்டிருக்கிறது என்பதை உணரமுடியும். மேற் கூறியவர்கள் தாம் ஆண்டு கொண்டிருக்கும் போது இப்படியான அடக்கு முறைகளைக் கையாண்டார்கள். ஆனால் புலிகளோ அதிகாரம் தமது கைக்கு வருமுன்பேயே ஆயுதப் பலத்தால் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக சொல்லொணா அழிவுகளை செய்து கொண்டிருக்கிறார்கள்.

எனவே தமிழீழ ஆட்சி அதிகாரம் புலிகளின் கைக்கு வந்தால் ஆட்சி எப்படியிருக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள். சாசக்கியுவின் ருமேனியா, கிட்லரின் ஜேர்மனி, பொல்பொட்டின் கம்பூச்சியா ஆட்சிகளிலும் பார்க்க படு மோசமான காட்டுமிராண்டித் தனமான காட்டுத் தர்ப்பாராக இருக்கும் என்பதை தமிழ் பேசும் மக்களுக்கு கூறிவைக்க வேண்டி உள்ளது.

கந்தன் – இலண்டன்

* * * * * * *

## தோழர்களின்.....
( நான்காம் பக்கத் தொடர்ச்சி )

மீண்டும் மீண்டும் நினைவுகூர வைக்கின்றன. வடக்குக்கிழக்கு நிரந்தர இணைப்பு, உபகண்ட அமைதி என்பவற்றில் அக்கறை கொண்டோர் திருகோணமலை திட்டமிட்ட சிங்களமயமாவதை காணும் போது தோழர். ஜோர்ஜினை நினைவு கூருகின்றனர்.

இதே போன்று அவருடன் தொடர்புகளை வைத்திருந்த சர்வதேச புரட்சிகர சக்திகளும் நினைவு கூருகின்றனர். தோழர். ஜோர்ஜின் இழப்பு தமிழ்பேசும் மக்களுக்கு, சிங்களமுற்போக்கு சக்திகளுக்கு ஏற்பட்ட இழப்பு. தோழர். ஜோர்ஜின் இழப்பு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிஎன்னும் புரட்சிகர ஸ்தாபனத்துக்கு ஏற்பட்டஇழப்பு. தோழர். ஜோர்ஜ் அவர்களின் இழப்பு சர்வதேச போராட்ட முற்போக்கு சக்திகளுக்கு ஏற்பட்ட இழப்பு.

படிப்பகம்

www.padippakam.com



பல்கலைக்கழக ஆசிரியர்கள் மனித உரிமைகள் (யாழ்ப்பாணம்) அறிக்கை

# அரசியல் அழிவுகளும் மனித சோகங்களும்

இப்போது யாழ் விவசாயிகளும், குடும்பப் பெண்களும் வெடிக்காத இவ்வகைக் குண்டுகளைத்தேடி வருகின்றனர்.

மக்களுக்காக யுத்தம் புரிவதை இரு சாராரும் கைவிட்டு நீண்டகாலமாகி விட்டது. இது அவர்களது உயிருக்கான போராட்டமாகி விட்டிருக்கிறது. ஆகஸ்டில் ஆகாய மார்க்கமாக அமுல் செய்யப்பட்ட ஊரடங்கின் போது வானில் பறந்த ஹெலிகொப்டர்கள் தரையில் அசையும் எதன்மீதும் தாக்குதல்நடத்தத் தயங்கவில்லை. அன்றையதினமே முத்திரைச் சந்தியில் புலிகள் அறிவிப்பு ஒன்றை விடுத்தனர். பிரயாணப் பாஸ்கள் விநியோகிக்கப்படவிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். மக்களும் பயணத்தின் அபாயத்தை சட்டை செய்யாமல் இரு சவரின்களை தத்தம் செய்து விட்டு இவ்விரு சாரரிடமிருந்தும் தப்பியோட நினைத்தனர். பாஸ் பெறுவதற்கான கியூவரிசை நீண்டது.

மக்களைக்காப்பது தொடர்பாக குறைந்த அளவிலேயே அக்கறை காட்டப்பட்டது. மக்களை ஆபத்தில் தள்ளுவதே இலக்காகி விட்டிருப்பதாகக் கருத வேண்டியிருந்தது. ஊர்காவல்துறையில் படையினர் வந்திறங்கியபோது அவ்வாறு படையினர் வந்திறங்கியதை புலிகள் மறுத்துரைத்தனர்., அல்லது படையினர் முன்னேறுவது தடுத்து நிறுத்தப்படும் என்றனர். யாழ் குடாநாட்டுக்குத் தப்பிச் செல்ல முயன்றோர் தடுக்கப்பட்டனர். இவர்களில் சிலர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்களில் ஒருவர் தமது இளம் பிள்ளையின் முன்பாக ஒரு ஆலயத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். கிழக்கில் நடைபெற்றவைக்கு ஒப்பான சம்பவங்கள் இங்கும் நடைபெற ஆரம்பித்தன.

பல வகையில் இதுஒரு வித்தியாசமான போராட்டமே. விடுதலை வீரர்களே போராட்டத்தை ஆரம்பித்தனர்ஆனால் மக்கள் நலன்களைக் கவனிக்கும் பொறுப்பு அரசாங்கத்திலுடையதாகவே இருந்தது. போராளிகளால் மக்களுக்கு உணவு, மின்சக்தி மற்றும் மருத்துவ வசதிகளை வழங்கமுடியாதிருந்தது. ஆனால் மக்களுக்கு இவற்றை வழங்க அரசாங்கம் முயலவில்லை என அரசு மீது குற்றம் சாட்டப்பட்டது. ஆகாயத் தாக்குதல்கள் உருவாக்கிய அவசியமற்ற வேதனைகள் வடபகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்களினாலும் விளைவிக்கப்பட்டன. இதனால் எதிரி நகரான கொழும்பில் மக்கள் தஞ்சமடைந்தனர். சுதந்திர அமைப்புகளை எல்லாம் அழித்தொழித்த விடுதலைப்புலியினர் மக்கள் நலனை கவனத்தில் கொள்ளுவதில் சிறிதளவே அக்கறை காட்டினர். யாழ்ப்பாணத்தில் அகதிகள் வந்து குவியத் தொடங்கினர். நூற்றி ஐம்பது ரூபாவுக்கு தங்க வளையல்கள் விற்கப்பட்டன. ஒரு தடவை இவ்வளவு குறைந்த விலைக்கு வளையல்களை வாங்குவது நியாயமற்றது எனக் கருதிய ஒரு பெண்மணி வளையல்களை வாங்க மறுத்தார். விலைஅதிகமானால் ஐம்பதுரூபாவுக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்றாராம் வளையல்களை விற்கவந்தவர். ஒரு வேளைச் சாப்பாட்டிற்காக ஆபரணங்களையே துறக்கத்தயாராக இருந்தனர் மக்கள். –

விடுதலையின்பேரில் தனிப்பட்டோரின் பேராசை, சுயநலம், பொய் மற்றும் சந்தர்ப்பவாதமே செழிந்தன. இவ்வகை அரசியலுடன் வளர்ந்து வந்த ஒரு சிந்தனைதான் அதிகபட்ச சமூக சீர்கேடானது அதிகபட்ச போராட்ட வீரர்களை உத்பத்தி செய்யும் என்பதும் அவர்களிடையே அளிக்கும் உறுதியைத் தோற்றுவிக்கும் என்பதாகும்.

பரந்தனில் நிலை கொண்டிருக்கும் இராணுவம் யூலையில் வாபஸ் பெற்றது. இராணுவம் இங்கு நிலைகொண்டிருந்தபோது தமது பாதுகாப்பின் பொருட்டு சந்தைச்சதுக்கத்தில் அமைந்திருந்த கடைகளை இடித்துவிட்டிருந்தது. பின்னர் இங்கு நுளைந்தபுலிகள் வங்கி புதிய தபால்நிலையம், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், நீர்த்தாங்கி ஆகிய கட்டிடங்களைத் தகர்த்தனர். மக்களுக்குச் சொந்தமான முக்கிய பைக்கில்களையும், ஆவணங்களையும் தீயிட்டுக்கொழுத்தினர். இராணுவம் தங்கியிருக்கக் கூடியவகையில் கட்டிடங்கள் விட்டுவைக்கப்படக்கூடாது என்பதே புலிகளின் இச்செய்கைக்கான சமாதானமாக இருந்தது. ஏராளமானோருக்கு வேலை வழங்கிவந்த பரந்தன் இராசயனதொழிற்சாலை உபகரணங்களும் அழிக்கப்பட்டன. இதேசமயம் பரந்தனுக்கு அண்மையிலுள்ள கிராமங்களில் வீடுகள் இராணுவத்தினரால் கொள்ளையடிக்கப் பட்டதாக யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் செய்தி வெளியாயிற்று. ஆனால் உள்ளூர்மக்களின் கூற்றுப்படி இக்கிராமங்களில் இராணுவம் அனேகமாகக் காணப்படவில்லையாம். தாக்குதலின்போது இக்கிராமமக்கள் வேறு இடம் சென்றிருந்தபோது வேறு சிலரால் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன. குமாராபுரத்தில் முன்னணி விடுதலைப்புலி ஆதரவாளரின்வீட்டைத் தவிர ஏனையவீடுகள் உடைக்கப்பட்டிருந்தன. கிராமமக்கள் அவரிடம்(இராணுவம்தான் இதைச்செய்திருக்கவேண்டும் அல்லவா)என்று கேட்டுவைத்தனர். முதலில் அதிர்சியுற்ற அந்நபர் பின்னர் சமாளித்துக்கொண்டு கிராம மக்களிடம் அதட்டும் வகையில் பதிலளித்தார்.

(உண்மையாகத்தான் சொல்கிறீர்களா இல்லை கிண்டல் விடுகிறீர்களா)

## ஒற்றுமை

விடுதலைப்புலிகள் மற்றும் இராணுவம் ஆகிய இருசாரரிடமும் கூடசிலசமயம் ஒற்றுமைகள் காணப்பட்டன. உதாரணத்துக்கு மன்னார் சம்பவத்தை எடுத்துக் கொள்ளலாம். கடந்த அக்டோபரில் மன்னார் முஸ்லீம்மக்களிடம் கொள்ளையடித்த விடுதலைப்புலிகள் அவர்களை மன்னாரைவிட்டு வெளியேற்றவும் செய்தனர். பின்னர் இராணுவம் மன்னாரில் புகுந்து தமிழ் வீடுகளைக் கொள்ளையிட்டது. இருசரராருமே எவ்வித யுத்தத்திலும் ஈடுபடாமல் இதைச்செய்து முடித்தனர்.

விடுதலைப்புலிகள் மக்களிடம் தங்கம் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்தபோது 'தங்கத்தை ஏன் வைத்துக் கொள்ள வேண்டும் என நினைக்கிறீர்கள். எங்களிடம் தாராவிட்டால் இலங்கை இராணுவம்புகுந்து தங்கத்தை கைப்பற்றுமே என்று மக்களிடம் கேட்டனராம்.

இம்முழுப் போராட்டத்தையும் ஒட்டுமொத்தமாக நோக்கும்போது இதில் அழிவைத்தவிர வேறுஎந்த ஒருநோக்கமோ திட்டமோ இருப்பதாகத்தெரியவில்லை.

கடந்த நவம்பர் மத்தியபகுதியில் யாழ்ப்பாணத்தை தமது முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக நினைத்து காரியமாற்ற ஆரம்பித்த விடுதலை புலிகள் இயக்கம் தமது ஈழக்கொடியை பறக்கவிடும் கைங்கரியத்தில் ஈடுபட வருமாறு மக்களை அழைத்தது. யாழ் கோட்டையில் தேசியவீரர்கள் வாரத்தை கொண்டாடும் பொருட்டு ஆத்திர முட்டக்கூடியவகையில் ஆயத்தங்களை அவ்வியக்கம் மேற்கொண்டது. ஆனால் இவ்வாறான ஆயத்தங்கள் வெற்றிப் பின்னணியில் செய்யப்படவில்லை. பதிலாக எதிரியை வாயிலில்வைத்துக்கொண்டே மேற்கொள்ளப்பட்டன. அச்சமயம் பலாலியிலிருந்த இராணுவத்தினர் வலிகாமம்வரை முன்னேறியிருந்தனர். அரசாங்கத்துக்கு அரசியல் விவேகம் மட்டும் இருந்திருந்தால் தனக்கு தமிழ்மக்கள்பால் சிரத்தையுண்டு என்பதை தெளிவாகவெளிக் காட்டியிருக்கவேண்டும். ஆனால் அரசோ விடுதலைப்புலிகளுடன் போட்டி போட்டுக்கொண்டு கொடுங்கோண்மையை வெளிப்படுத்திற்று. இக்காரணத்தை அடிப்படையாகக்கொண்டே பசியால் வாடிவரும் மக்களுக்கான உணவு விநியோகிக்கப்படாமல் தடுத்துவைக்கப்பட்டது. இதே காரணத்தாலேயே நோயாளரும் குண்டுத்தாக்குதலினால் காயமுற்றோரும் பெரும் திண்டாட்டங்களுக்கு உள்ளாயினர். இதனால் விடுதலைப்புலிகள்பாதிக்கப்படவில்லை. மக்கள் மோசடிக்காரரிடம் தஞ்சமடைய வேண்டிய நிலையை அது உருவாற்று அரசாங்கமோ மக்களை துன்புறுத்தும் நடவடிக்கைகளை இம்மட்டில் நிறுத்திவிடவில்லை. வெளியிடங்களில் வாழும் மக்கள் மதஅமைப்புகளின் ஊடாக உணவுப்பொட்டலங்களை யாழ்ப்பாணத்தில் வாழும் உறவினர்களுக்கு அனுப்பி வைத்தபோது அவை திருட்டுப்போயின

மெழுகுவர்த்தி, தீப்பெட்டி போன்ற பொருட்கள் பொட்டலங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டன. நோயாளர்களுக்காக எடுத்துச் செல்லப்பட்ட அத்தியாவசிய மருந்து வகைகள் வவுனியாவில் இராணுவத்தினரினால் திருடப்பட்டன. செனடோஜன் போத்தல்களும் திருட்டுக்குள்ளாயின.

இத்தகைய ஒரு கொள்கையால் அரசாங்கம் முக்கியமான ஒரு அரசியல் யுத்தத்தில் தோற்றுப் போயிற்று. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் இருசாரருமே ஆயுதம் தாங்காத மக்களுடன் போரிடவாரம்பித்தனர். இதன் பொருட்டு அச்சம், பொறுப்பு, தரித்திரம், வளமின்மை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் வீரர்களாகுமாறு வர்ப்புறுத்தப் பட்டனர். இருசாரருமே மக்களுக்கு எதிரான வெறுப்பு மற்றும் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். தமிழ் தீவிரவாதிகளை எடுத்துக்கொண்டால் அவர்களுடைய குறிப்பிட்டுச் சொல்லமுடியாத நோக்கம் விடுதலையாகவே இருந்து வந்திருக்கிறது. ஆனால் தமது சொந்த ரத்தமும் சதையுமான மக்களிடம் எப்படி வன்மம் பாராட்டமுடியும் இதை என்னவென்று விவரிப்பது?

விடுதலைப்புலிகளுக்கும் பிரேமதாசாவுக்குமிடையே நல்லுறவு நிலவியபோது முக்கியமான ஒரு விடயம் வெளியே தெரியவந்தது. அதாவது தாக்குப்பிடித்து நிற்கவேண்டிய அவசியம் ஏற்படும்போது தலைவர்கள் ஒன்றுகூடி விடுவர் என்பதுதான் அது. இப்போது கூட இருசாரரும் தந்திரோபாயரீதியான உடன்படிக்கைக்கு வரக்கூடிய சாத்தியமுண்டு. புலிகள் கொழும்பில் ஒருமுகத்தையும் யாழ்ப்பாணத்தில் வேறு ஒரு முகத்தையும் காட்டுவர். பேட்டியை எடுத்துக்கொண்டால் அது தமிழில் ஒரு விதமாகவும் ஆங்கிலத்தில் இன்னொரு விதமாகவும் இருக்கும். ஆங்கிலத்தில் சுதந்திரத்தன்மை கொண்டதாக இருக்கும் பேட்டி, துரோகிகளுக்கு எச்சரிக்கை விடுப்பதாக தமிழில் அமைந்திருக்கும்.

ஈழத்துக்காக உயிர்த்தியாகம் செய்யும்படி நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு உபதேசம் செய்துவிட்டு போராட்டத்தில் தந்திரோபாயம் மிக்க மாற்றமும் அவசியமென அவர்கள் கூறக்கூடும். புலிகள் போராடியதால் தான் தமிழ்மக்களுக்கு இவ்வளவாவது கிடைத்தது என்று மீண்டும் தெரிவிக்கப் படலாம். இவ்விருசாரருமே ஒரு விசயத்தை மறந்துவிட அல்லது அமுக்கி விட விரும்புகிறார்கள். அதுதான் இப்பிரச்சனையால். உயிர்விட்டவர்களை பற்றிய எண்ணிக்கை ஒரு துப்பாக்கி மனிதனின் தனது விருப்பப்படி மனிதர்களின் உயிரைப்பறித்துவிடமுடியும் என்ற ரீதியாக இருசாரருமே நடந்து வந்துள்ளனர். இந்த ஈவிரக்கமற்றதன்மை வெளியே சொல்லக்கூடத் தகுதியற்றது. இப்பிரச்சனையால் இதுவரை உயிரிழந்தவர்களுக்குப் பதில் சொல்லும் வரை சமாதானத்துக்காக எடுக்கப்படும் முயற்சிகள் வீணானவையாகவே இருக்கும்.

(தொடரும்)

## சொல்லவும் வெட்கமடா

*மீண்டும் ஆட்சியைப் பிடித்தால் எப்படி இருக்கும் என்ற கனவிலேயே காலத்தைக் கழித்துவரும் கலைஞர், கர்நாடக கலவரத்தில் எங்கேயாவது கொஞ்சநாளைக்கு குளிர் காயலாமா என மூளையைக் கசக்கிக் கொண்டிருக்கையில், சென்னையில் கன்னடநடிகர் ராஜ்குமார் வீட்டின் மீதான தாக்குதல் எல்லாவற்றையுமே குழப்பிவிட்டிருக்கிறது. பர்மாவை வைத்து பராசக்தி எடுத்து முன்னுக்கு வந்தவர், கர்நாடகாவை வைத்து காவிரி என்று படம் எடுத்து தனது இழந்தஇடத்தைமீட்க முயற்சித்தாலும் முயற்சிக்கலாம்*

*அம்மானை யார் தடுத்தாலும் யாழ் வருமாறு கடிதத்துக்கு மேல் கடிதம் அனுப்பி வருந்தி அழைக்கிறார்கள் மாவீரர்கள். ஆனால் அம்மான் யோசனையில் எதுவுமேயில்லை எனப் பிதற்றித் திரிகிறார்கள் தமிழீழ வெளிநாட்டு அமைச்சின் மாவீரர்கள். ஆகமொத்தம் தமிழக கடற்கரை கதவடைப்பும், குடாநாட்டை நெருக்கியுள்ள சுற்றிவளைப்பும் கொடுத்திருக்கும் நெருக்கடியை சரிப்பண்ண மாவீரர்கள் வழமையாக மேற்கொள்ளும் இழுத்தடிப்புத்தான் இந்த மாயமான் விஜயம். குடாநாட்டில் பொங்கும் பூம்புனலில்... வாராய் நீவாராய் வருவதற்கு வெகுதூரமில்லை நீ...*

*தீவுகளில் கபடநாடகம் ஆடிவரும் படையினர், தீவுகளை ஒளிமயமாக்க பிரத்தியேக ஜெனரேட்டர்களை கொண்டுவந்துள்ளார்களாம். அதுமட்டுமல்ல மக்களை கப்பலில் ஏற்றிச் சென்று திருகோணமலையில் இறக்கி வெளிநாட்டிலுள்ள உறவினருடன் தொலைபேசி கதைக்க விட்டும், சாமான்கள் வாங்க விட்டும் திருப்பிக் கூட்டிவருகிறார்களாம். மாவீரர்கள் மதியீனத்தை தமக்கு சாதகமாக்கிக்கொண்டு வெளுத்துக்கட்டுகிறார்களாம். தமிழ்மக்களை யார் முட்டாள்களாக்குகிறார்கள். அவனுக்குத்தான் தெரியும் ஆரம்பமும் அதன் முடிவும்....*

*அன்புதாசரின் பிரித்தாளும் தந்திரத்துக்கு மேலும் ஒருவர் பலிக்கடாவானார். நான்தான் முஸ்லீம் மக்களின் தானைத்தலைவன் என மார்தட்டி காங்கிரஸ் அமைத்தவர் இப்போது அன்புதாசருடன் ஐக்கியமாக உள்ளதாகத் தெரிகிறது. நாலு பா.உ. க்களை வைத்திருக்கும் இவருக்கு எலும்புத் துண்டாக மந்திரிப் பதவியாம். அடுத்து அன்புதாசருக்கு கைகொடுத்து வரும் நம்மவர்கள் எப்போது ஐக்கிய தேசிய ஜோதிக்குள் கலக்கப் போகிறார்களோ என்ன கிடைக்கப் போகிறதோ. கொழும்பில் ஓர் இனிய கானம், நாளை நமதே நாளை நமதே தாசர் வழி வந்த தங்கங்கள் எல்லாம் ஓர்வழி சென்றால் நாளைநமதே....*

படிப்பகம்

## அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே !

அடக்கு முறைக்கும் அராஜகத்துக்கும் அடியிலே சிக்கித்தவிக்கும் எமது மக்களின் சார்பாக... கண்ணாடியில் பாதரசத் துளிகள் வழிவது போல பார்த்துக் கொண்டிருக்கவே உயிர்கள் போய்க் கொண்டிருக்கும் ஒரு தேசத்தின் சார்பாக...உங்களோடு பல்வேறுபட்ட எமது பிரச்சனைகளை இங்கு பகிர்ந்துகொள்ள விரும்புகிறோம்.

இன்று எமது மக்களுக்கு உணவு இல்லை... மருந்து இல்லை...இருப்பதற்கு வீடுஇல்லை, மின்சாரம், எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் இல்லை. பேசுதற்கும்,எழுதுவதற்கும் , கருத்துக்கூறுவதற்கும் சுதந்திரமில்லை..உயிர்பாதுகாப்பு இல்லை.மொத்தத்தில் எதிர்காலம் குறித்த எந்தவித நம்பிக்கையுமே இல்லை.

எமது மக்களின் இன்றைய இத்தனை துன்பங்களுக்கும், இன்றைய இத்தனை இழப்புகளுக்கும் காரணமான ஸ்ரீ லங்காஅரசாங்கம்,புலிகள் ஆகிய இரு தரப்பினருமே இனப்பிரச்சனைக்கான தீர்வுஒன்று காணப்படவேண்டும். தமிழ்பேசும் மக்களின் துன்பங்கள் தீர்க்கப்படவேண்டும் என்பதில் ஒருதுளிகூட அக்கறையற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது தான் இன்றைய உண்மை நிலை.

நாட்டுக்கடன் எல்லை கடந்து விட்டது. அதற்குக் கட்டவேண்டிய வட்டிக்கே வழியில்லாமல் அரசு தவிக்கிறது. நாட்டை சீர்படுத்த வேண்டுமென்றால் பொருளாதாரத்தைச் சீரமைக்கவேண்டும். ஆனால் அதற்கான எந்த முயற்சிகளும் எடுக்கப் படவில்லை.

தும் பிரேமதாசாவின் அரசாங்கத்துக்கு அக்கறையில்லை. சகல இனங்களையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களைப் பலிகொண்டு தீவின் ஒருபகுதியை சுடுகாடாக்கி, நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கி, தேசத்தின் எதிர்காலத்தை நிர்மூலமாக்கிக்

**சகல அதிகாரங்களையும் தன்னகத்தே வைத்திருக்கும் ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வாக எதை முன்வைக்கிறது. இந்த அரசு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் வந்த மாகாண சபை அமைப்புமுறையை நிராகரித்து,அதனைச் சீர்குலைத்தது தமிழ்கட்சிகள் சமர்ப்பித்த எட்டுஅம்சக் கோரிக்கையை கணக்கில் எடுக்கவில்லை. இப்போது தொண்டமானின் திட்டம் குறித்து பேச மறுக்கிறது. அப்டியானால் இனப் பிர்ச்சனை குறித்து இந்த அரசின் உண்மைநிலை என்ன?**

ஒருபுறம் பிரேமதாவின் குடும்பத்தினரால் நாட்டின் வளங்கள் சூறையாடப்படுகின்றன. அரசதேயிலைத்தோட்டங்களும் வளமிக்க நிறுவனங்களும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தாரைவார்க்கப் படுகின்றன. தனியார் மயமாக்கல் என்ற போர்வையில் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்படுகிறார்கள். நாட்டின் வேலையில்லாதோரின் எண்ணிக்கை கிடுகிடு

கொண்டிருக்கும் நாட்டின் எரியும் பிரச்சினையாகிய இனப்பிரச்சனையை தீர்ப்பது குறித்து அரசுக்கு எவ்விதமான சிந்தனையுமில்லை.

அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே !
சகல அதிகாரங்களையும் தன்னகத்தே வைத்திருக்கும் ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசாங்கம் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வாக எதை முன்வைக்கிறது. இந்தஅரசு இந்திய

நாடுகள் அனைத்துக்கட்சி குழுநடவடிக்கைகள் எல்லாமே வெறும் கண்துடைப்புக்களே.

உண்மையிலே சீனாவிலும், செக்கோஸ்லவாக்கியாவிலும் கொள்வனவு செய்திருக்கும் நவீனரக ஆயுதங்கள் மூலமும் யாழ்ப்பாணத்தில் குவித்திருக்கும் பல்லாயிரக்கணக்கான படைகளின்மூலமே இந்த அரசாங்கம் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைக்குத் தீர்வுகாண விரும்புகிறது. அதாவது தமிழ்பேசும் மக்கள் மீது ஒரு பாரிய அழித்தொழிப்பு நடவடிக்கையைக் கட்டவிழ்ப்பதன் மூலம் ஒரு இராணுவத் தீர்வைக் காணுதலையே பிரேமதாசாவின் அரசு விரும்புகிறது.

பிரேமதாசாவின் இந்த இனஅழிப்பு நடவடிக்கைகள் வெற்றியடைவதற்கான கதவுகளை புலிகள் அவருக்கு வசதியாக திறந்து விடுகின்றனர். வடக்கு, கிழக்கு, மலையகம் என்று கிளர்ந்து எழுந்து நின்ற ஒரு ஒடுக்கப்பட்ட இனத்தின் போராட்டத்தை சிதைத்து யாழ்குடாநாட்டிற்குள் குறுக்கிவிட்ட புலிகள் போராட்டத்தின் உந்துசக்திகளாக திகழ்ந்த எண்ணற்றோரை படுகொலை செய்தும், வதை முகாம்களில் அடைத்துவைத்தும் அடக்குமுறை அரசாளர்களுக்கு வலு கொடுத்து விட்டனர்.

# அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே!

ஐ.தே.க.யின் வாக்குவங்கியும் சிரேஷ்ட அமைச்சருமான திரு. தொண்டமான் இனப்பிரச்சனைகளுக்கான தீர்வை புலிகளுடன் பேசி மாயாஜால மந்திரவித்தைகளின் மூலம் கொண்டு வரப்போவதாக அரசதரப்பு செய்திப்பத்திரிகைகளும், புலிகளின் குரல்களும் ஒலிபரப்புகின்றன.
ஆனால் அமைச்சரவைப் பேச்சாளரான ரனில் விக்கிரமசிங்காவோ தொண்டமானின் முயற்சிகள் தனிப்பட்டவை என்றும்,அரசாங்கத்துக்கும் இம்முயற்சிக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்றும் கூறியதுடன் இன்னுமொருபடி மேலே போய் இந்தவிடயம் குறித்து அமைச்சரவையில் விவாதிக்கவேயில்லை என்றும் கூறியிருக்கிறார்.

சகல அதிகாரங்களையும் தன்னகத்தே குவித்து வைத்திருக்கும் ஜனாதிபதி பிரேமதாசாவோ இது பற்றி தனது வாயைத்திறக்காமல் பௌத்த சங்கங்கள் மூலமும் தமக்குச்சார்பான இனவெறி பிடித்த சிங்கள அமைப்புக்கள் மூலமும் வடக்குக் கிழக்கை இணைக்காதே,தமிழ் மக்களுக்கு உரிமை வழங்காதே என்பது போன்ற இனவாதக் கோசங்களைக் கிளப்பி மீண்டும் ஒரு இரணகளத்தை ஏற்படுத்தும் செயலை வெகு தந்திரமாக செய்துவருகிறார்.

அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே!
உண்மையிலே பொருளாதார ரீதியாக மிகமோசமான கட்டத்தில் இன்று ஸ்ரீ லங்கா பிரேமதாசாவின் அரசினால் தள்ளப்பட்டிருக்கிறது. ஸ்ரீ லங்காவின் வெளி

என உயர்கிறது.

மறுபுறம் வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் பலகோடி பெறுமதியான நிதியை அபிவிருத்திக்காக அரசாங்கம் செலவழிக்காமல் மீண்டும் மீண்டும் தமிழ் பேசும் மக்கள்மீது தான் தொடுத்திருக்கும் யுத்தத்தை நீடிப்பதற்கான புதிய புதிய ஆயுதக் கொள்வனவிற்கும், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தனது படையினரை பராமரிப்பதற்குமே செலவழித்து வருகிறது. இதன்காரணமாக கல்வி,அபிவிருத்தி, சமூகநலன் போன்ற துறைகள் முற்றாகவே அரசினால் புறக்கணிக்கப் பட்டுவிட்டன.

நாடு பல்வேறுபட்ட சீரழிவுகளுக்குள் தள்ளப்பட்டு விட்டது. பிரேமதாசாவுக்கு எதிராக கருத்துக்களை வெளியிடுபவர்கள் கொல்லப்படுகின்றனர்... கைதுசெய்யப்பட்டு காணாமல் போகின்றனர்(றிச்சார்ட் டீ சொய்சாவிலிருந்து குகமூர்த்தி வரை பலர்) பொய் வழக்கு போடப் படுகின்றனர்... பதவிகள் பறிக்கப்படுகின்றனர்.
நாடு முழுவதும் கொலை , கொள்ளை போன்ற குற்றச்செயல்கள் பாரிய அளவில் அதிகரித்துவிட்டன. போதைவஸ்து கடத்தல் மாத்திரமல்ல போதைவஸ்து பாவனையும் பெருமளவில் மாணவர் மற்றும் இளைஞர்களிடையே பெருமளவில் பரவியுள்ளது. மிக மோசமான பாலியல் வியாதிகளும் பெரும் பாதிப்பை கொடுக்க ஆரம்பித்துள்ளன.

ஆனால் இந்த எந்தப்பிரச்சனை குறித்

ஸ்ரீ லங்கா ஒப்பந்தத்தின் கீழ்வந்த மாகாணசபை அமைப்புமுறையை நிராகரித்து அதனை சீர்குலைத்தது. இப்போது தொண்டமானின் திட்டம் குறித்துக்கூட பேசமறுக்கிறது. அப்படியானால் இனப் பிரச்சனை குறித்து இந்த அரசின் உண்மை நிலை என்ன ?
இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு எந்த திட்டத்தையும் முன்வைக்காத இந்த அரசினால் நடத்தப்படும் சர்வகட்சி மா

அன்பார்ந்த தமிழ் மக்களே எதிர்காலம் குறித்த எந்த கனவோ.. நம்பிக்கையோ இல்லாத நிலையில் எமது மக்களின் வாழ்வில் இன்னுமொருவருடம் இவ்வருடத்திலாவது எமது உரிமைகளை வென்றெடுக்க எம்மிடையேயான வேறுபாடுகளை களைந்து... எமது இருப்புக்காக இல்லாமல்... எமது மக்களின் வாழ்வுக்காக உழைக்கும் ஐக்கியத்துக்காக முயல்வோம். ✶ ✶ ✶ ✶ ✶ ✶

## கொலை:கொள்ளை;கற்பழிப்பு;கடத்தலில்,அரசு — புலிகள் போட்டி

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கோமாரி அகதிமுகாமில் இருந்து காலைக் கடன்களை கழிக்கச் சென்ற கணபதிப்பிள்ளை நிர்மலா(18) என்றபெண்,மூன்று அதிரடிப்படையினரால் கற்பழிக்கப்பட்டுள்ளார். மட்டுநகரில் பல கொள்ளைகளில் ஈடுபட்ட 10 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்தப் பத்துப்பேரில் இருவர் படையினர் எனத் தெரியவந்துள்ளது. அம்பாறை மாவட்டம் அண்ணாமலைக் கிராமத்திற்கு மாடு கொள்வனவு செய்யச் சென்ற அக்பர்,ஆதம்பாவாஎன்ற இரு முஸ்லிம்கள் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

## ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர்நாயகம் - இந்தியத் தலைவர்கள் சந்திப்பு

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிசெயலாளர் நாயகம் தோழர். க. பிரேமச்சந்திரன் அவர்களும் மத்தியகுழு உறுப்பினர் தோழர். கேதீஸ்வரன் அவர்களும் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாகவும்,இந்தியாவில் இருக்கக் கூடிய இலங்கை அகதிகள் தொடர்பாகவும்,மத்திய வெளியுறவு அமைச்சர் மாதவசிங் சோலங்கி,வெளியுறவுச் செயலாளர் தீட்ஷித் ஆகியோருடனும், மற்றும் மத்திய அமைச்சர்கள்;அதிகாரிகளையும் சந்தித்துள்ளனர். தமிழ்பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க இந்திய அரசினதும் ஏனைய அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்பையும் கோரியுள்ளனர். இலங்கை வெளிவிவகாரஅமைச்சர்,இந்தியாவுடன் நடாத்தியுள்ள பேச்சுவார்த்தைக்கு முன்பு இச்சந்திப்புகள் நடைபெற்றது முக்கியத்துவம் வாய்ந்தது என இந்திய அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

www.padippakam.com
படிப்பகம்

# முறிந்த பனை



திருமதி ரஜனிதிரணகம,மூன்றுவிரிவுரையாளர்களுடன் சேர்ந்துஎழுதி வெளியிட்ட "THE BROKEN PALMYRAH" (முறிந்தபனை என்னும் நூலின் தமிழாக்கத்தின் சிலபகுதிகள் 'விடுதலை' பத்திரிகையில் ๑.๑.1990.முதல் வெளிவந்துள்ளது.அதனை தொடர்ச்சியாக இங்கே மறுபிரசுரம் செய்கிறோம்.

றொலோ மீதான தாக்குதலைத்தொடர்ந்து புலிகள் நடத்திய பிரச்சாரத்தில், தமது நடவடிக்கைக்கான இரு காரணங்களைக் கொடுத்திருந்தது :

(1) ரெலோஎன்பது மக்களைத் துன்புறுத்திக்கொள்ளையடித்த ஒரு குற்றவாளிகளின் குழு.

(2) ரெலோ இந்திய ஏகாதிபத்தியத்தின் உளவாளிகளாக இயங்கியமை.

இதை உறுதிப்படுத்துவதற்காக, மீட்டெடுக்கப்பட்ட கொள்ளைப் பொருட்களும், நகைகளும்.வாகனங்களும் திருப்பித்தரப்படும் என இயக்கம் அறிவித்திருந்தது.

உண்மையில் ரெலோவினால் பாவிக்கப்பட்ட கார்கள்,களவுபோன ரெலிவிஷன், வீடியோடெக்குகள் வின்சர் தியேட்டர் அருகாமையில் பார்வைக்காக வைக்கப்பட்டதுடன்,பொதுமக்கள் சிலரால் அவை உரிமைகோரப்பட்டன.

ஆனால் எவ்வித நகைகளும் மீளளிக்கப்படவில்லை. ஆனாலும் தெல்லிப்பளை துர்க்கை அம்மன்கோயிலில் களவுபோன நகைகள் மர்மமானமுறையில் திரும்பவும் தோன்றியதுடன் கடவுளின் கோபமும் தவிர்க்கப்பட்டது.

மக்கள் பலரும் நிகழ்ந்தவைகளை ஒப்பிட்டு இதுநல்லதே என நினைத்தார்கள்.

புலிகளினால் கொடுக்கப்பட்ட முதலாவது காரணம் யாழ்ப்பாணநகரில் நன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஈ.பி.ஆர்.எல்.எவ்.கூட பல ரெலிவிஷன் செற்களையும், வாகனங்களையும் தமக்கு மேலும் தேவையில்லை எனக்கூறி மீளளித்தது. ஈ.பி.ஆர்.எல்.எவ். இப்பொருட்களை வைத்திருக்கட்டும் எனவிரும்பிய மக்கள்கூட இவற்றை இப்போது தாம் வைத்திருப்பதைத்தவிர வேறு வழியில்லையென உணர்ந்தனர்.

ஈழத்தேசிய விடுதலை முன்னணி (E.N.L.F) பங்குதாரர்களில் ஈ.பி.ஆர்.எல்.எவ்.மட்டுமே ஸ்ரீ சபாரத்தினத்தின் கொலையையும், நட்பின்துரோகத்தையும் எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை ஒழுங்கு செய்யும் துணிவைக் கொண்டிருந்தது.

> ஈழத்தேசிய விடுதலை முன்னணியில் இருந்தவர்களில் ரெலோ இயக்கம் புலிகளினால் அழிக்கப்பட்ட போது ஈ.பி.ஆர்.எல்.எவ் மட்டுமே,ஸ்ரீ சபாரத்தினத்தின் கொலையையும் நட்பின் துரோகத்தையும் எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை ஒழுங்கு செய்யும் துணிவைக் கொண்டிருந்தது. ஈரோஸ் இயக்கம் மௌனத்தைக் கடைப்பிடித்தது. இதனால் புலிகள் ஈரோசை நல்ல அமைப்பென முதுகில் தட்டிக் கொடுக்க ஆரம்பித்தனர்.

ஈரோஸ் இயக்கம் மௌனத்தைக் கடைப்பிடித்தது. இதனால் புலிகள் அதனை மிக நல்ல அமைப்பென முதுகில் தட்டிக்கொடுக்க ஆரம்பித்தனர். பத்திரிகைகளும் கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் கூட புதிய நிர்வாகத்துடன் ஒத்துவந்தன.

ஸ்ரீ லங்கா இராணுவத்தினரின் நடவடிக்கைபற்றி வெளிப்படையான விமர்சன நோக்குள்ள ஆயர் தியாகப்பிள்ளையின் கீழுள்ள றோமன் கத்தோலிக்க திருச்சபைகூட அதன் பலத்த பின்னணியையும் அதன் அறம்சார்ந்த அதிகாரங்களையும் தமிழ்சமூகத்தின் உள்ளேயுள்ள கோளைத்தனத்தினதும் நியாயத்தின் உணர்ச்சி அற்ற தன்மையினதும் அபாயகரமான திசைவழியை எதிர்த்து பாவிக்கமுயல தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாணவெளியீடான 'Morning Star' இதழின் ஆசிரியர் தலையங்கமான 'மாதாவின் மே மாதம்' என்றதலைப்பின் கீழுள்ள ஒரு பகுதியில் 'நடந்து முடிந்தவற்றால் போராளிகளின் நோக்கம் பலவீனமடைந்துள்ள'தெனக்கூறியுள்ளது. மேலும் அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது 'இதைத் தொடர்ந்த ஸ்ரீ லங்காதாக்குதலை முறியடிப்பதில் போராளிகளின் வெற்றி நிரூபிக்கப்பட்டதால் இதுஅவ்வாறிருக்க வேண்டியது அவசியமில்லை' எனவும் 'அதைத்தொடர்ந்து யாழ்ப்பாண குண்டு வீச்சுத்தாக்குதலில் மக்கள் தோளோடு தோள்நின்று போராளிகளுக்கு உதவி செய்தார்கள்' எனவும் கூறியுள்ளது.

அதி புத்திசாலியாக இருந்த யாழ்ப்பாண மனிதன் குறைவான தடையுள்ள பாதையையே பின்பற்றும் இயல்பினனாயிருந்தான்.

அடிக்கடி அந்தப் பாதைகளை மாற்ற வேண்டியிருந்தது கூட எவ்விதப் பின்விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை.

ரெலோவுக்கு எதிராகநடத்திய தாக்குதலுக்குப்பின்னர் மன்னிப்பு கோரியவர்கள் புலிகளை அழிக்கும்படி, இந்தியா ரெலோவைக் கேட்டிருந்ததாகவும், இதனால் தமக்கு வேறுவழி இருக்கவில்லை என்றும் கூறிக்கொண்டனர். புலிகள் இந்தியாவின் வழியினைப் பின்பற்றிநடக்க மறுத்தமையே இவ்வாறான கட்டளைக்குக் இந்தியா அவ்வாறான விருப்பத்தைத் தெரிவிப்பதாக நாம் எடுத்துக்கொண்டாலும் ரெலோ அதனை அவ்வளவு சிரத்தையாக எடுத்துக்கொண்டதா என்பது வேறுவிடயமே. ரெலோ தரப்பில் அவ்வாறான ஒரு நோக்கம் இருந்தாக எடுத்துக்கொண்டாலும்,அதற்கடுத்த அண்மைக் காலத்தில் ரெலோ அவ்வாறு ஒரு இலட்சியத்தைச் சிரத்தையுடன் அடைவதற்கு இருந்தார்கள் என்று யாழ்ப்பாண அவதானிகளுக்கு நம்புவதற்குகஷ்டமானதாகவே இருந்தது.

ஏனெனில் அவர்கள் பிளவுபட்டுச் சீர்குலைந்து இருந்ததுடன் தகவல் தொடர்பு வசதிகளிலும் பின்னடைந்திருந்தார்கள்.

சூழ்நிலைகளையும், கல்வியங்காட்டில் ஸ்ரீ சபாரத்தினத்தின் தரிப்பிடங்களையும் பார்க்கும்போது, ரெலோ அவ்விதமான மோதும்நோக்கத்துடன் இருந்ததாகத் தெரியவில்லை.

ரெலோ அந்த நேரத்தில் பயிற்சி பெற்ற பெருந்தொகையான உறுப்பினர்களைவெளியேஅனுப்பியிருந்ததும், அதற்கு எதிர்மாறாக புலிகள் இயக்கமானது ஸ்ரீ லங்கா முகாம்களைத் தாக்குவதற்கு என்னும் வதந்தியுடன் தமது ஆட்களை யாப்பாணத்தினுள் குவித்ததும் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

'தாஸ்' பிரிவைச்சேர்ந்த ஐந்து முக்கிய உறுப்பினர்கள் 'பொபி' பிரிவினரால் ஒருமாதத்திற்கு முன்னரே கொல்லப்பட்டிருந்ததானது ரெலோ இயக்கத்தினருக்கிடையே இருந்த பிரிவினை மேலும் மோசமடையச்செய்திருந்தது என்பது மிகவும் முக்கிய அம்சமாகும். இதேபோன்ற கொலைகளற்ற சந்தர்ப்பவாத சூழ்நிலை புலிகள்,ஈ.பி.ஆர். எல். எவ் ஐத் தடைசெய்ய முன்னரும் இருந்தது. பெயரளவில் ஏழு மாதங்களின் பின்னர் ஏற்பட்ட ஈ.பி. ஆர். எல். எவ். அரசியல் தலைவரான பத்மநாபாவிற்கும், இராணுவப்பிரிவின் தலைவரான டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளிலிருந்து தோன்றிய பிளவே இதுவாகும். (தொடரும்)

★ ★ ★ ★ ★


ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்.

EELAM PEOPLES INFORMATION CENTRE

POST BAG - 5551
MADRAS - 600094
INDIA.

B.M. BOX - 1738
LONDON-WCIN-3XX
U. K.

POST FACH - 100206
4600 DORTMUND - 1
GERMANY.

P. BOX 6800
AGINCOURT
ONTARIO M1S3C6
CANADA.

BOITE NO - 69
7 - RUE RACINE
95140 - GARGES
FRANCE.

POST BOKS - 115
GROURD HAGENEN
0905 - OSLO - 9
NORWAY.

POST BOX - 52
LAVERTON
VICTORIA - 3028
AUSTRALIA.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரச்சாரச் செய்திப்பிரிவான ஈழ மக்கள் செய்தித்தொடர்பு நிலையத்தின் ஐரோப்பிய பிரிவினால் 'புதியபார்வை' வெளியிடப்படுகிறது.


www.padippakam.com
படிப்பகம்